# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 01.05.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# கிழக்கில் கொவிட் 3 ஆவது அலை
# 964 பேருக்கு தொற்று; 05 பேர் உயிரிழப்பு

**தொற்றாளர் எண்ணிக்கை திருமலை 500, அம்பாறை 328, மட்டக்களப்பு 109, கல்முனை 17**

**(வேதாந்தி)**

கிழக்கு மாகாணத்தில் மூன்றாவது அலை கொரனா தொற்றினால் 05 பேர்மரணமடைந்துள்ளதாக மாகாண சுகாதாரத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

### பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான
## வழக்கு முற்றாக இடைநிறுத்தி நீதிவான் கட்டளை
### எம்.ஏ.சுமந்திரன் நேரில் ஆஜர்



**(சந்திரன் குமணன், காரைதீவு சகா)**

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணிக்கு நீதிமன்ற தடை உத்தரவினை

02 ஆம் பக்கத்தில்...

### கோரோனா நோயாளிகள் அதிகரிப்பால்
## மட்டு போதனா வைத்தியசாலையில் ஒட்சிசன் தேவை அதிகரிப்பு



**(மட்டு நிருபர்)**

கொரோனா அதிகரிப்பால் மட்டு போதனா வைத்தியசாலையில் ஒட்சிசன் தேவை அதிகரித்துள்ளது. எனவே

02 ஆம் பக்கத்தில்...

### திருமலையில் பதிவான
## கோரோனா மரணம்

**(அப்துல்சலாம் யாசீம், பொன் ஆனந்தம்)**

காய்ச்சல், மூச்சுத்திணறல் காரணமாக திருகோணமலை பொது வைத்தியசாலையில்

07 ஆம் பக்கத்தில்...

### மட்டக்களப்பு வைத்தியசாலையில்
## 19 கோரோனா நோயாளர்கள் சிகிச்சை



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியின் விசேட கூட்டம் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபரும் செயலணியின் தலைவருமாகிய கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது.

02 ஆம் பக்கத்தில்...

## தேரிவுப்பரீட்சைகள் ஒத்திவைப்பு!

**(நூருள் ஹுதா உமர்)**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கை நிலையத்தினால்

02 ஆம் பக்கத்தில்...

### கல்முனை பிரதேச செயலக விவகாரம்
## கூட்டமைப்பு பிரதிநிதிகள் பிரதேச செயலாளருடன் சந்திப்பு

**(வி.ரி.சகாதேவராஜா)**


அங்கு கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பாக பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜுக்கும்

02 ஆம் பக்கத்தில்...



## மட்டக்களப்பு, கல்முனையில் இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கல்





**(ஏ.எல்.எம். ஷினாஸ், காரைதீவு சகா, ரீ.எல்.ஜவ்பர்கான்)**

கொவிட் 19 தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை வழங்கும் நிகழ்வு நேற்று

02 ஆம் பக்கத்தில்...

## மூன்றாவது அலை வீரியமானது அதிக அவதானம் தேவை



**(பைஷல் இஸ்மாயில்)**

கொவிட் 19 தொற்றின் மூன்றாவது அலையின் தாக்கமானது வேகமானதாகவும், வீரியம் கூடுதலாகவும் காணப்படுவதால் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென கிழக்கு மாகாண சுகாதார

07 ஆம் பக்கத்தில்...


## சாய்ந்தமருதில் 2 மீனவர்கள் மின்னல் தாக்கி பலி

**(நூருல் ஹுதா உமர்)**

சாய்ந்தமருதில் இருந்து கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் மீன்பிடிக்காக கடலுக்கு சென்ற இரு மீனவர்கள் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி

02 ஆம் பக்கத்தில்...

## மட்டு மாவட்டத்தின் கோரோனா தடுப்பு செயலணியின் புதிய பிரதானியாக கேணல் நிலாந்த



**(படுவான் பாலகன்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் (Covid - 19) கொரோனா தடுப்பு

02 ஆம் பக்கத்தில்...


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மட்டு மாவட்டத்தின் கொரோனா தடுப்பு

செயலணியின் பிரிக்கேடியர் எஸ்.ஆர்.ஜீ.கமகே தனது 7 மாத சேவையினை பூர்த்தி செய்து தற்போது கம்பஹா மாவட்டத்தின் கொரோனா தடுப்பு செயலணியின் இராணுவ தரப்பு பிரதானியாக நற்று 30.04.2021 வெள்ளிக்கிழமை முதல் இடமாற்றம் பெற்றுச்செல்கின்றார்.

இவருடைய இடத்துக்கு புதிய பொறுப்பாளராக கொழும்பு இராணுவத்தலைமையகத்தில் தொடர்பாடல் பிரிவில் கடமையாற்றிய கேணல் நிலாந்த கடமைகளை பொறுப்பேற்கவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

## சாய்ந்தமருதில் 2 மீனவர்கள் மின்னல்

ஜனாஸாவாக கரை திரும்பிய சோகம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு சாய்ந்தமருதில் பதிவானது.கடலில் தங்கியிருந்து மீன்பிடிக்கும் தொழிலை செய்துவந்த இவர்கள் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி மரணித்ததாக இவர்களுடன் கடலுக்கு மீன்பிடிக்க சென்றவர் தெரிவித்தார். சாய்ந்தமருதை சேர்ந்த அன்ஸார் என்றழைக்கப்படும் இப்ராஹிம் இக்பால் (வயது42), எம்.எஸ். அர்சாத் (வயது35) ஆகியோரே மின்னலுக்கு இலக்காகி மரணித்துள்ளதுடன், இவர்களின் ஜனாஸாக்கள் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் காயமடைந்த இப்ராஹிம் மன்சூர் (வயது 43) மரணித்த (இப்ராஹிம் இக்பாலின் சகோதரர்) கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சாய்ந்தமருதில் சோகம் நிலவிவருகிறது.

## தெரிவுப் பரீட்சைகள் ஒத்திவைப்பு!

02.05.2021 ஆம் திகதி நடத்தப்படவிருந்த ஆங்கில டிப்ளோமா பாடநெறி மற்றும் ஆங்கில சான்றிதழ் பாடநெறி (Diploma in English and Certificate in English 2019/2020) ஆகிய கற்கை நெறிகளுக்காக மாணவர்களை தெரிவு செய்வதற்கான தெரிவுப்பரீட்சைகள் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலைய உதவிப்பதிவாளர் அறிவித்துள்ளார்.

## கிழக்கில் கொவிட் 3 ஆவது அலை

மரணமடைந்தவர்கள் 05 பேரும் திருகோணமலை மாவட்டத்தைச்சேர்ந்தவர்கள். குறிப்பிட்ட மரணங்களுடன்கிழக்கில் கொவிட் தொற்றினால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 31ஆகஅதிகரித்துள்ளது.

3வது அலையில் கிழக்கில் இதுவரை 964பேர்தொ ற்றுக்குள்ளாகியுள்ளனர். இதில் திருமலை 500 அம்பாறை328 மட்டக்களப்பு 109. கல்முனை17 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 784 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை கடந்த நேற்று கிழக்குமாகாணத்தில் 265 பேர் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதில் அம்பாறை 158, திருகோணமலை 73, மட்டக்களப்பு33, கல்முனை01 என பதிவாகியுள்ளது.

## மட்டக்களப்பு வைத்தியசாலையில் 19 கொரோனா நோயாளர்கள்

இக்கூட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான மாவட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பாகவும், மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் எனவும் அதற்காக அரச நிறுவனங்களின் முன்னேற்பாடுகள் தெடர்பாகவும் ஆராயப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 19 கொரோனா நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டு அதில் 5 பேர் செயற்கை சுவாச பிரிவின் கண்காணிப்பில் பராமரிக்கப்பட்டுவருவதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்ட வேளை இவர்களுக்கான குறைபாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது கரடியனாறு, கல்லாறு மற்றும் காத்தான்குடி ஆகிய கொரோனா சிகிட்சை நிலையங்களில் அதிகளவிலான நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் அதிகளவான நோயாளர்கள் இனங்காணப்படுமிடத்து மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறை நிலவலாமெனும் இவ்விடையம் சுகாதாரத் தரப்பினரால் செயலணியின் அவதானத்திற்கு கொண்டுவரப்பட்டது. இது தொடர்பில் சுகாதாரத் திணைக்களத்தினால் வேறு வைத்தியசாலையில் கொரோனா தொற்றாளர்களை அனுமதிப்பதற்கான முன்னாயத்ததினையும் தாம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

அதே வேளை மாணவர்களது கல்வி செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்ட போது எதிர் வரும் காலங்களில் தனியார் வகுப்புக்கள் நடாத்துவதற்கு முற்றாக தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும், உணவகங்களில் உணவுகளை பெற்றுச் செல்வதற்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், மதுபான விற்பனை சாலைகள் இயங்குவதற்கும் அதே நேரம் ஹோட்டல்களில் மதுபான வினியோகம் முற்றாக தடைசெய்யவும், பொதுவாக வியாபார ஸ்தலங்களில் மக்களின் நெரிசலை குறைப்பதற்காக ஒரு தடவையில் ஐந்து பேரை மாத்திரம் அனுமதிப்பதற்கும், அத்தோடு சகலவிதமான சுகாதார நடவடிக்கைகளை இறுக்கமாக கடைப்பிடிக்கும் படியும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு அறிவுறுத்துவதற்கும் இதன்போது முடிவுகள் எட்டப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் (Covid 19) கொரோனா தடுப்பு செயலணியின் இராணுவத் தரப்பு பிரதானி பிரிக்கேடியர் எஸ்.ஆர்.ஜீ.கமகே, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த்,

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொரோனா தடுப்பு செயலணியின் புதிய இராணுவ தரப்பு பிரதானி கேணல் வீ.எம்.என்.எட்டியாராச்சி, மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன், போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் க.கலாரஞ்சினி, உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், பிரதேச செயலாளர்களாகிய உ.உதயசிறிதர், வீ.வாசுதேவன், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.சுஜாத்தா, வைத்திய நிபுணர் சுந்தரேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

## மட்டக்களப்பு, கல்முனையில் இரண்டாம்

வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன் முதலாவது தடுப்பூசியை போட்டு நிகழ்வை ஆரம்பித்தார்.

முதலாம் கட்ட தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 4800 க்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**மட்டுமாவட்டத்தில்...**

இதேவேளை, கொரோனா தடுப்பூசி ஏற்றும் இரண்டாம் கட்டப்பணிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி பணிமனையில் சுகாதார வைத்தியதிகாரிகளான டாக்டர் ஈ.உதயகுமார் எஸ்.கிரிசுதன் ஆகியோர் தலைமையில் இடமபெற்ற தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையின்போது வைத்தியதிகாரிகள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தாதியர்கள் பிராந்திய சுகாதரா சேவைகள் நிலைய ஊழியர்கள் வைத்தயசாலை ஊழியர்கள் ஆகியோர் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை ஏற்றி; கொண்டனர்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைககள் தொடர்ந்தும் இடமபெறுமென மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி ஈ.உதயகுமார் தெரிவித்தார்.

## கல்முனை பிரதேச செயலக விவகாரம் கூட்டமைப்பு பிரதிநிதிகள்

தமிழ் தேசிய கூட்மைப்பின் பிரதிநிதிகளுக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

த.தே.கூட்டமைப்பு யாழ்.பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.எ.சுமந்திரன் நேற்று வெள்ளிக்கிழமை கல்முனைக்கு விஜயம் செய்தார்.

கல்முனை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்ற பொத்துவில் பொலிகண்டி வழக்கில் ஆஜராகினார். பின்னர் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளரி.ஜே.அதிசயராஜ் உடனான சந்திப்பொன்று நடைபெற்றது.

த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான த.கலையரசன், இரா.சாணக்கியன், கோ.கருணாகரம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், காரைதீவு தவிசாளர் கி.ஜெயசிறில், கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன், மாணவர் மீட்பு பேரவை தலைவர் செ.கணேஸ், பிரமுகர் செ.புவிராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பாக அங்கு விரிவாக ஆராயப்பட்டது.அண்மையில் அறிவிக்கப்பட்ட தரங்குறைப்பு பற்றியும் ஆராயப்பட்டது.

## கொரோனா நோயாளிகள் அதிகரிப்பால் மட்டு போதனா

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்று அவதானமாக செயற்படுமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இடம்பெற்ற மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியில் நேற்று வெள்ளிக்கிழமை எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அண்மையிலே சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றிக்கைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்திலே பொதுமக்கள் அதிகளவாக நகர்பகுதியில் நடமாடுவதாகவும் ஒரு சில இடங்களிலே தனியார் வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே இன்றில் இருந்து தனியார் வகுப்புக்கள் நிறுத்துவதகா முடிவு எடுக்கப்பட்டுள்ளது இதை மீறுவோருக்கு எதிராக சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிசாராலும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதே வேளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலே வழக்கமாக ஒரு நாளைக்கு 4 தொடக்கம் 5 சிலிண்டர் ஒட்சிசன் தேவைப்படுவது வழக்கம் ஆனால் தற்போது அங்கு கொரோனா தொற்றாளர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுவருவதன் காரணமாக ஒரு நாளைக்கு 15 சிலிண்டர் ஒட்சிசன் தேவைப்படுகின்றது.

எனவே இதுவரை காலமும் ஒட்சிசனைப் பற்றி சிந்திக்கவில்லை ஆகவே மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் அதேவேளை பொலிசார் இராணுவத்தினர் மற்றும் சுகாதார அதிகாரிகள் ஏற்படுத்துகின்ற கட்டுப்பாடுகளை கண்டிப்பாக கடைப்பிடித்தால்தான் இந்த கொரோனா தொற்றை தடுக்க முடியும்.

அதே வேளை பொதுமக்களை வினையமாக கேட்டுக் கொள்வது மரணச்சடங்குகளில் 25 பேரும் திருமணவீடு அல்லது கோயில் 50 பேருக்கு மேல் கலந்துகொள்ள கூடாது பொது இடங்களில் அனாவசியமாக கூடக்கூடாது நீரிழிவு நோய் உள்ளவர்கள் மற்றும் உயிர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் வீட்டை விட்டுவெளியேறி பொது இடங்களுக்கு செல்லவேண்டாம்.

இந்த 3ம் கட்ட கொரோனா இளம் சந்ததியினரை தாக்குவது அதிகம் எனவே பொதுமக்கள் அவதானமாக செயற்படவும் இல்லாவிடில் வேறுமாவட்டங்களில் எதிர்நோக்கும் பிரச்சனையை எதிர்நோக்க வேண்டிவரும் என மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றேன் என்றார்.

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான வழக்கு முற்றாக

தொடரப்பட்ட வழக்கினை கல்முனை நீதவான் நீதிமன்றம் தொடர்ந்து நடார்த்தவும் அதன் மீது கட்டளை பிறப்பிக்கவும் மே 18 ம் திகதி வரை கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை விதித்து கட்டளை பிறப்பித்துள்ளது.

பேரணிக்கு தடை விதித்த நிலையில் பேரணியில் பங்குகொண்டு நீதிமன்றை அவமதித்தனர் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட % பேருக்கு எதிரான வழக்கு நேற்று கல்முனை நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இதற்கு எதிராக ஆட்சேபனை மனுவினை கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்து ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் நிரான் அங்கிற்றல் ஆகியோர் ஆஜராகி வாதங்களை முன் வைத்தனர். இதனை ஏற்ற மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான அர்ச்சுனா ஒபயசேகர, மாயதுன்ன கொரயா ஆகியோர் மேற்படி கட்டளையை வழங்கினர்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணை செய்யும் நியாயாதிக்கம் நீதவான் நீதிமன்றிற்கு கிடையாது ஆகவே கல்முனை நீதவான் நீதிமன்றில் இன்று இடம்பெற்ற வழக்கினை தடை செய்யக்கோரி முன் வைக்கப்பட்ட சமர்ப்பணத்தை ஏற்ற நீதிமன்றம் எதிர் வரும் 18ஆம் திகதிவரை இடைக்கால தடை விதித்ததோடு எதிராளிகளுக்கான அறிவித்தலை வழங்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் கல்முனை நீதவான் நீநிமன்றின் பதிவாளருக்கு இந்த கட்டளையை தொலைநகல் மூலமும் அனுப்பி வைக்குமாறும் கட்டளையிடப்பட்டதோடு இந்த வழக்குத் தொடர்பில் கல்முனை நீதவான் நீநிமன்றம் இதற்கு மேல் எந்த உத்தரவும் வழங்க கூடாது எனவும் கட்டளையிடப்பட்டது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியை தடுக்க கோரி பெப்ரவரி 2ம் திகதி பின்னேரம் கல்முனை பொலிஸ் கோரியிருந்த தடையுத்தரவுக்கு கல்முனை நீதிவான் நீதிமன்றம் பொதுமக்களுக்கு உயிர் அல்லது சுகாதாரத்திற்கு பாதிப்பில்லாதவாறு பேரணி செல்பவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்ற உத்தரவுதான் பொலிஸாருக்கு கொடுக்கப்பட்டது . அப்படியாக பேரணி நடைபெற்றபோது .

இன்று வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிரதிவாதங்கள் தரப்பினர் வழக்கை மீளப் பெறுமாறு சமர்ப்பணம் விடுத்தபோது நீதிவான் பொலிஸாரிடம் வழக்கை மீழப்பெறுவீர்களா என கேட்டபோது மேலிடத்து உத்தரவு மேலிடத்திலிருந்து அனுமதி பெற வேண்டும் என தெரிவித்ததாக குறிப்பிட்டார்.

குறித்த வழக்கு முற்றாக இடைநிறுத்தி நீதிவான் கட்டளை பிறப்பித்துள்ளதாக தெரிவித்தார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் கோ.கருணாகரம் த.கலையரசன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன் சீ.யோகேஸ்வரன் மாணவர் மீட்பு பேரவை தலைவர் செ.கணேஷ் ஆனந்தம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலாளர் அ.நிதான்சன் ஆகியோரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதி மன்றில் ஆஜராகுமாறு கல்முனை நீதவான் அழைப்பாணை பிறப்பித்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் இலங்கைப் பிரஜையா? சீனப் பிரஜையா?

## இம்ரான் எம்.பி கேள்வி



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தற்போது மக்கள் மத்தியில் அதிர்ப்தியை ஏற்படுத்தியுள்ளது 69 இலட்சம் வாக்குகளை பெற்று வந்த ஜனாதிபதி மக்களை திருப்திப்படுத்தவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்துரைக்கையில் சீனி மோசடி, தேங்காம் எண்ணெய் மோசடி எனத் தொடங்கி தற்போது கேஸ் மோசடியை ஆரம்பித்துள்ளது இலங்கை வாழ் மக்களை முட்டாளாக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது 12.5 நிறை கொண்டதை 1525 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிற அதே நேரம் 1426 ரூபாவுக்கு 9.2 நிறை கொண்டதை வழங்குகிறது நூறு ரூபா குறைத்து 3kg இடை குறைக்கப்பட்டுள்ளது .12.5 நிறைகொண்ட கேஸை வாங்க வேண்டுமானால் 1832 ரூபா செலவை செய்ய வேண்டும்.

இதனால் 307 ரூபா அதிகரித்து காணப்படுகிறது. இப்படியாக கொவிட்19 மூன்றாம் கட்ட அலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர் கடந்த இரு நாட்களுக்குள்ளும் அதிகூடிய தொற்றாளர்கள் அடையாளங்காணப்பட்ட போதிலும் நாட்டை முடக்க மாட்டோம் என்கிறார்கள் ஆனால் தனிமைப்படுத்தல் காலம்14 நாட்கள் 30 ம் திகதி வரை பாடசாலை விடுமுறைகள் ஐந்து நாட்களுக்குள் கொரோனாவை ஒழிக்க முடியுமா ?

கொவிட்19 உம் அரசின் நாடகமா அல்லது மேதினத்தை முடக்கும் செயற்பாடா. பாரிய மேதினத்தை ஐக்கிய மக்கள்சக்தி ஜே வி.பி மைத்திரி அணியினர் நடாத்த திட்டமிடப்பட்டது. இதனை முடக்கவே இந்த நாடகம் அரங்கேற்றப்படுகிறது.

புர்காதடையினை மீண்டும் கொண்டு வந்துள்ளனர் ஒரு மாதத்திற்கு முன்னர் ஜெனிவா வாக்கெடுப்பில் முஸ்லிம் நாடுகளின் உதவி தேவை என்பதற்காக அதனை கைவிட்டு தற்போது சீன நாட்டு பாதுகாப்பு அமைச்சர் இலங்கை விஜயம் செய்யும் போது மீண்டும் புர்கா விடயத்தை விஸ்வரூபமாக்கியுள்ளனர்.

இதனால் சீன நாட்டு பாதுகாப்பு அமைச்சர் இலங்கை விஜயம் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது இலங்கை பிரதமர் ஜனாதிபதி இடையில் மேற்கொண்ட ஒப்பம் தான் என்ன பாதுகாப்புக்காக நிதி வழங்கப்பட்டதாகவும் பேசப்படுகிறது.

முழு இலங்கையையும் சீனாவுக்கு கொடுத்துவிடுவார்கள் போல கொழும்பு போர்ட் சிட்டியை கொடுக்க இருப்பவர்கள் நாளை திருகோணமலை துறைமுகத்தை கொடுக்கமாட்டார்களா இதனால் நாம் இலங்கை பிரஜையா சீன நாட்டு பிரஜையா என சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றார்.

# தலைவர் ரிசாட் பதியுதீன் எப்போதும் மக்களுக்காகவே குரல் கொடுப்பவர்



(பாறுக் ஷிஹான்)

எமது மக்களால் அனுப்பப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் காபட் வீதிகளையும் கொங்கிறீட் வீதிகளையும் பெற்றுக்கொண்டு கொந்துராத்து காரர்களாகவும் தரகர்களாகவும் மாறியுள்ளனர். எமது தலைவர் ரிசாட் பதியுதீன் அப்படிப்பட்டவர் அல்லர்.எப்போதும் மக்களுக்காகவே குரல்கொடுப்பவர் என நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபையின் ஏப்ரல் மாதத்திற்கான 04 ஆவது சபையின் 37ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு வியாழக்கிழமை மாலை நிறைவடைந்த பின்னர் இரவு நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் தலைமையில் நடைபெற்ற செ ,தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது;

இந்த நாட்டில் தற்போது பேசுபொருளாக இருக்கின்ற விடயம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாட் பதியுதீனின் கைதாகும்.இவ்விடயத்தில் பல்வேறு விடயங்களை உற்றுநோக்க வேண்டியுள்ளது.குறிப்பாக அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர்.இந்த நாட்டில் பல காலமாக அமைச்சராக இருந்து மக்களுக்கு பணியாற்றிய ஒருவர்.தற்போதும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு இருக்கின்ற சூழ்நிலையில் குற்றவாளி என்ற தீர்ப்பை சட்டம் வழங்கப்படாத நிலையில் சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் இவருடைய அமைச்சின் கீழ் இருக்கின்ற நிறுவனத்தில் அதற்குரிய பொருட்களை குண்டுதாரிகள் கொள்வனவு செய்தார்கள் என்ற அடிப்படையில் அந்த நேரம் அமைச்சராக இருந்த நிலையில் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஒரு நீதிமன்றத்தின் ஆணையுடன் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தாலும் பரவாயில்லை.அவ்வாறியில்லாமல் சந்தேகத்தின் அடிப்படையில் அவரை விசாரிக்க புனித நோன்பு தினத்தில் நள்ளிரவில் சென்று அத்துமீறி அவரது வீட்டு கதவுகளை உடைத்து கைது செய்து தற்போது சிறை வைத்துள்ளார்கள்.இந்த கைது நடவடிக்கையை சாதார மக்கள் கூட விளங்கி கொள்ளும் அளவிற்கு இந்நாட்டின்அரசியல் நிலை சென்று கொண்டு இருக்கின்றது.

தற்போது பாராளுமன்றத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களும் கைது நடவடிக்கையை ஆட்சேபித்து பேசியுள்ளார்கள்.சிறுபான்மை முஸ்லீம் கட்சிகளின் உறுப்பினர்களும் குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் உரையாற்றியுள்ளார்.இஸ்லாமிய பெயர் தாங்கிய வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒர சிலரால் நடத்தப்பட்டதை வன்மையாக கண்டிக்கின்றோம்.தொடர்ச்சியாக இச்சம்பவம் இடம்பெற கூடாது என்பதற்காக முஸ்லீம்களாகிய நாங்களே அவர்களை காட்டி கொடுத்திருந்தோம்.இதே போன்று சாய்ந்தமருது மக்கள் கூட அக்குழுவினரை அடையாளம் கண்டு இராணுவம் பொலிஸாரிடம் பிடித்து கொடுத்திருந்தார்கள்.

சாந்தி சன்மார்க்கம் ஆகியவற்றை போதிக்கின்ற மார்க்கம் இதவாகும்.நோன்பு காலத்தில் நாம் இருந்து கொண்டு இருக்கின்றொம்.எமது தலைவரை எமது மக்களுக்கு நன்கு தெரியும். ஏழை மக்களின் கண்ணீரை துடைத்தவர் அவர்.

இச்செய்தியாளர் சந்திப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் சபை அமர்வுக்கு கருப்புச்சால்வை அணிந்து சமூகமளித்திருந்ததுடன் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

# பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை அநாகரிகமான முறையில் கைது செய்தது கண்டிக்கப்பட வேண்டியது

## பிரதேச சபை தவிசாளர் முஜாஹீர்

(வாஸ் கூஞ்ஞ)

ஜனநாயக முறைப்படி பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டவர் பல விசாரனைகளுக்கு முகம் கொடுத்து குற்றமற்றவர் என தெரிவிக்கப்பட்டிருந்தவரை பாதாள கோஷ்டியினரை கைது செய்வது போன்று முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீனை அநாகரிகமாக கைதுசெய்தது எமக்கு வேதனை அளிக்கின்றது என மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹீர் இவ்வாறு தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் மற்றும் அவரின் சகோதரரையும் கைதுசெய்ததைத் கண்டித்து மன்னாரில் வியாழக்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹீர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்

தற்பொழுது எங்கள் முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீனையும் அவரின் சகோதரரையும் சிறைபிடித்து வைத்திருக்கின்றார்கள். ஒரு பாராளுமன்ற உறுப்பினரை பாதாள கோஷ்டியினரை கைதுசெய்வது போன்று இவரை அநாகாரியமான முறையில் கைது செய்துள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களாக குற்ற புலனாய்வு பிரிவினர் இவரை விசாரனைக்கு அழைக்கப்பட்டபோதெல்லாம் இவர் அதற்கு ஒத்துழைப்பு வழங்கி விசாரிக்கப்பட்டார். இவர் குற்றமற்றவர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அப்படியிருந்தும் இவரை எப்படியாவது சிறைபிடித்துவைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இவரை தற்பொழுது சிறைபிடித்துவைத்துள்ளீர்கள். இதை இன்றைய அரசும் வெளிநாடுகளும் இதை கைகட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டு இருக்கின்றது.

முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் எவருக்கும் தீங்குகூட விளைவிக்க விரும்பாத மனிதராவார். அப்படியிருந்தும் உயிர்த்த ஞாயிறு அன்று தற்கொலை தாக்குதல் நடாத்தப்பட்ட போது அடுத்த நிமிடமே இவரையே சந்தேகப்பட்டு கதைகள் பரப்பப்பட்டது.

இதை உணர்ந்த றிசாட் பதியுதீன் அவர்கள் பாராளுமன்றத்தில் தெரிவிக்கும்போது நான்தான் இதைச்செய்தேன் என்று யாராவது தெரிவித்திருந்தால் என்னை நன்கு விசாரித்து நான் குற்றவாளியாக காணப்பட்டால் எனக்கு மரண தண்டனை தாருங்கள் என அறி



வித்திருந்தார்.

ஆனால் இவர் மக்களால் ஜனநாயக முறைப்படி பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர். இவ்வாறு இருக்க இவர் சபாநாயகரின் அனுமதி பெறாமல் ஒரு அடாவடித்தனத்தில் கைது செய்யப்பட்டுள்ளது எமக்கு வேதனையை அளிக்கின்றது.

# அரச உத்தியோகத்தர்களுக்கு வாழ்க்கை செலவிற்கு போதிய சம்பள உயர்வு வழங்க வேண்டும் -மே தின செய்தியில் மு.சே.உ.தொ.சங்கம்

(கல்லடி நிருபர், ரக்ஸனா)

அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வாழ்க்கைச் செலவிற்கு போதியதாக சம்பள உயர்வு வழங்குதல் வேண்டும் என்று அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற் சங்கம் தனது மேதினச் செய்தியில் கோரிக்கை விடுத்துள்ளது.

இச்சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ.முபாறக் விடுத்துள்ள இச்செய்தியில், 2016 ஆம் வருடத்தில் பத்தாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பினை தருவதாகக் கூறி, இத் தொகையினை 2020 ஆம் ஆண்டு வரை 05 வருடங்களுக்கு, வருடமொன்றிற்கு இரண்டாயிரம் ரூபாவிற்கும் குறைவான தொகையினை சம்பள அதிகரிப்பாக வழங்கப்பட்டது. ஆனால் இக்காலப்



பகுதியில் வாழ்க்கைச் செலவு, மிகக் கடுமையாக ஏறிச் சென்றுள்ளது. ஒரு மாதத்திற்கு கிடைக்கப் பெறுகின்ற சம்பளம், குறிப்பாக இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களுக்கு மாதத்தின் பாதி நாட்களுக்குக்கூட ஈடு செய்யமுடியாது. அரசாங்க உத்தியோகத்தர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

இலவச கல்வி நடைமுறை இருந்தாலும், உயர்தர போட்டிப் பரீட்சையில், பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்லாமல் வெற்றி இலக்கை எண்ணிப் பார்க்க முடியாத நிலைமை காணப்படுவதை யாராலும் மறுக்க முடியாது. போக்குவரத்திற்கும், பிரத்தியோக வகுப்பு கட்டணத்திற்கும் மாதமொன்றிற்கு பத்தாயிரம் ரூபா போதமல் உள்ளது. இரண்டு பிள்ளைகள் பிரத்தியேக வகுப்பிற்கு செல்லும் ஒரு வீட்டிற்கு மாதமொன்றிற்கு இருபதாயிரம் ரூபா பிரத்தியேக வகுப்பிற்கான செலவிற்கு மாத்திரம் தேவையாக உள்ளது.

25 வருட சேவைக் காலத்தை கொண்ட ஒரு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரின் வருமானம் சுமார் நாற்பதாயிரம் ரூபாவாகவே உள்ளது. இதில் ஒய்வூதிய கொடுப்பனவிற்கும் ஏனைய கழிப்பனவுகளும் நீங்கலாக மட்டுமட்டாக முப்பதாயிரம் ரூபாவே கிடைக்கப் பெறுகின்றன. இதனால் அரசாங்க உத்தியோகத்தர்கள் வாழ்க்கைச் செலவிற்கு போதிய வருமானமின்றி நாள்முழுக்க மிகவும் சஞ்சலத்துடனும், மன உழைச்சலுடனும் கவலையுடனும் காலத்தைக் கழித்து கொண்டிருக்கின்றனர்.

எனவே, ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளம் ரூபா 50,000 /= இல் இருந்து ஆரம்பிக்க கூடியதாக அனைத்து உத்தியோகத்தர்களின் சம்பளங்களும் மறுசீரமைக்கப்படல் வேண்டும் என்று இம்மேதினத்தில், அரசாங்கத்தை பகிரங்கமாக கேட்டுக்கொள்கின்றேன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலையில் இலங்கை கடற்படையினருக்கு பயிற்சி



(பைஷல் இஸ்மாயில்)

கடல் மார்க்கமாக பயணிக்கும் படகு மற்றும் கப்பல் போன்றவற்றில் தீ ஏற்பட்டு எரியும் தீயை எவ்வாறு அணைப்பது மற்றும் அது தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றிய செயற்பாட்டு பயிற்சிகள் இலங்கை கடற்படையினருக்கு நேற்று திருகோணமலை துறைமுக கடற்பரப்பில் இடம்பெற்றது.

இந்த பயிற்சி வழங்கும் செயற்பாட்டின் போது படகு மற்றும் கப்பலில் ஏற்பட்ட தீயை எவ்வாறு அணைப்பது, அதில் பயணம் செய்தவர்களை எவ்வாறு காப்பாற்றி வைத்தியசாலைக்கு கொண்டு சேர்ப்பது பற்றியும், ஏனைய கடற்படை, தரைப்படை மற்றும் வான்படை ஆகியோர்களை எவ்வாறு உதவிக்கு அழைப்பது தொடர்பான பயிற்சியுடன் கூடிய விளக்கமும் கொடுக்கப்பட்டது.

மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறான முதலுதவிகளை வழங்கவேண்டும் என்றும் அவ்வாறு முதலுதவி வழங்கப்பட்டவர்களை தரைக்கு கொண்டு வந்து வைத்தியசாலையில் அனுமதிப்பு தொடர்பான விடயங்கள் பற்றிய பயிற்சியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## கிருமித் தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கை

கிழக்கு மாகாண திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றின் வேகம் அதிகரித்து காணப்படுவதால் சகல திணைக்களங்களுக்கும் கிருமித் தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், நேற்று கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தில் கிருமித் தொற்று நீக்கி விசிறப்படுவதை படங்களில் காணலாம்.

(படங்கள் - பைஷல் இஸ்மாயில்)

## முகக்கவசம் இன்றி வெளியில் நடமாடுவோர் பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படுத்தப்படுவர்

### ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி

(வி.சுகிர்தகுமார்)



புதிய வகை கொரோனா வைரஸ் காற்றிலும் பரவக் கூடியதுடன் சுமார் ஒன்றரை மணித்தியாலம் உயிர் வாழக் கூடியது என அறிய முடிகின்றது. ஆகவே இனிவரும் நாட்களில் மக்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எஸ்.அகிலன் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் தலைமையில் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் அவசரமாக ஒன்று கூடிய பிரதேச கொரோனா தடுப்பு செயலணிக்கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இக்கூட்டத்தில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர், கணக்காளர் க.பிரகஷ்பதி பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன் இராணுவ அதிகாரி தயானந்த ஆரியதாச மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் பொலிசார் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய பிரதேச செயலாளர் கொரோனாவின் தாக்கம் சற்று உயர்வடைந்துவரும் நிலையில் மக்களின் பாதுகாப்பு தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை மற்றும் தீர்மானங்கள் தொடர்பில் அனைவரது கருத்துக்களையும் வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் இங்கு கருத்து தெரிவித்த ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எஸ்.அகிலன் தற்போது உருவாகியுள்ள வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதன்மூலம் மாத்திரமே நமது பிரதேசத்தை பாதுகாக்க முடியும் என்றார். மேலும் ஆலயங்களின் நிகழ்வுகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் வியாபார நிலையங்களின் உரிமையாளர்களும் கொள்வனவு செய்வோரும் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கையினை பேண வேண்டும் என்றார். ஆயினும் கொவிட் சட்டத்தை மீறுவோர்க்கு எதிராக பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் முகக்கவசம் இன்றி வெளியில் நடமாடுவோர் பிசிஆர் பரிசோதனைக்குட்படுத்தப்படுவர் எனவும் குறிப்பிட்டார்.

இதேநேரம் கருத்து தெரிவித்த பிரதேச சபை தவிசாளர் ஒலிபெருக்கி மூலமாகவும் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் மூலமும் மக்களை தெளிவூட்டும் தமது நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

இந்நிலையில் இராணுவமும் பொலிசாரும் மக்களை பாதுகாக்கும் நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக கூறினர். ஆயினும் மதுபானசாலை உள்ளிட்ட மக்கள் அதிகமாக ஒன்று கூடும் இடங்கள் தொடர்பில் கண்காணிக்கப்படும் எனவும் உறுதியளித்தனர்.

நிறைவாக பிரதேச செயலாளர் கடந்த காலம் மட்டுமன்றி நிகழ்காலத்திலும் கொவிட் தாக்கத்தை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்கி வரும் அனைத்து திணைக்களங்கள் உள்ளிட்டவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் இருந்து விடைபெற்று செல்லும் பிரிகேடியர் கமகே



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொரோனா தடுப்பு செயலணியின் பிரிக்கேடியர் எஸ்.ஆர்.ஜீ.கமகே தனது 7 மாத சேவையினை பூர்த்தி செய்து தற்போது கம்பஹா மாவட்டத்தின் கொரோனா தடுப்பு செயலணியின் இராணுவ தரப்பு பிரதானியாக வெள்ளிக்கிழமை முதல் இடமாற்றம் பெற்று செல்கின்றார்.

இவர் கடந்த 7 மாத காலங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றி வந்த போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தெற்றின் தாக்கம் அதிகளவில் பரவி வந்த காலகட்டத்தில் இன, மத, சாதி வேறுபாடுகள் இன்றி தனது அர்ப்பணிப்பான பணியினை இம் மாவட்டத்திற்கு வழங்கி ஒரு மாத காலத்திற்குள் கொரோனா பரவலினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு இவருடைய பாரிய பங்களிப்பும் காணப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியின் இராணுவ தரப்பின் பிரதானியாக செயற்பட்டு சுகாதார திணைக்களத்துடன் மற்றும் மாவட்ட செயலகத்துடன் இணைந்து நெருங்கி பணியாற்றி மட்டக்களப்பு மாவட்டத்தினை இயல்பு நிலைக்கு குறுகிய காலத்திற்குள் கொண்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், மட்டக்களப்பு மாவட்டத்தின் கொரோனா தடுப்பு செயலணியின் புதிய இராணுவ தரப்பு பிரதானி கேணல் வீ.எம்.என்.எட்டியாராச்சி, மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன், போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் க.கலாரஞ்சினி, உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், பிரதேச செயலாளர்களாகிய உ.உதயசிறிதர், வீ.வாசுதேவன், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.சுஜாத்தா, வைத்திய நிபுணர் சுந்தரேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பிரியாவிடை பெற்றுச் செல்லும் பிரிக்கேடியர் கமகே அவர்களின் சேவையினை பாராட்டி கௌரவிக்கும் முகமாக பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## சாய்ந்தமருதில் சுகாதார விதிகளை மீறிய 6 உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது பிரதேசத்தில் சுகாதார சட்ட விதிகளை மீறிய 06 உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, 97000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் இவ்வுணவகங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகள் நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.முஹம்மட் சம்சுதீன் மேற்படி அபராதத்திற்கான கட்டளையைப் பிறப்பித்துள்ளார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் அவர்களின் ஆலோசனையின் பேரில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அல்அமீன் ரிசாத் மற்றும் முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி ஆகியோரின் நேரடி கண்காணிப்பில் சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள உணவகங்கள் மீது அண்மையில் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின்போது மேற்படி 06 உணவங்களிலும் சுகாதார சட்ட விதிகள் மீறப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டிருந்தது.

இதையடுத்து கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் குறித்த உணவகங்களுக்கு எதிராக 19 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாக சாய்ந்தமருது பிரதேச மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஜே.எம்.நிஸ்தார் தெரிவித்தார்.

அதேவேளை மற்றொரு உணவகத்தின் மீது Poor Quality Tea Powder என்ற அரச பகுப்பாய்வு அறிக்கையை ஆதாரமாக கொண்டு தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தரம் குறைந்த உணவு வகைகள் விற்பனை செய்ய முடியாது என்று சட்ட ரீதியான ஆதாரங்கள் இருப்பின் அதனை அடுத்த தவணைக்கு மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டு, விசாரணையை ஒத்திவைத்தார்.




## கல்முனை பொது மயானத்தின் சுற்று மதில் அமைக்கும் பணிகள் ஆரம்பம்



(கல்முனை ஸ்ரீ)

கவனிப்பாரற்று கிடந்த கல்முனை பொது மயானத்தின் சுற்று மதில் அமைக்கும் வேலைகள் பொது மக்களின் நிதிப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன தமது இறந்த உறவினர்களது ஞாபகார்த்தமாக ஒவ்வொரு தொகுதியாக பொறுப்பேற்று இதனை செய்து வருகின்றனர்

இவ் மயானத்தின் பின்புற மதில் பல அடி உயரத்திற்கு கட்டப்படுவதுடன் பொது மக்கள் தனது சொந்த நிதியை அதற்கு வழங்கி வருவதுடன் அவ் மதிற் சுவர்களில் தமது இறந்த உறவினர்களது ஞாபகார்த்தமாக பெயர் விபரங்களை பொறிக்கவும் இடமளிக்கப்பட்டுள்ளன

இவ் மதிலில் சில அடித் தூரங்கள் இன்னும் கட்டப்படாமல் உள்ளதுடன் நலன் விரும்பிகள் அதனை கட்ட முன்வரலாமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.




## திருமலையின் மேலதிக அரசாங்க அதிபராக பி.ஆர்.ஜயரத்ன நியமனம்

(பொன்ஆனந்தம்)



திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக (காணி) பி.ஆர்.ஜயரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்

அவர் தனது கடமைகளை கடந்த 28 ம் திகதி மாவட்ட செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தரான இவர் 2006 ம் ஆண்டு திறந்த போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டார்.

திம்புலாகலை, நொச்சியாகம உதவி பிரதேச செயலாளர், கெப்பிதிகொள்ளாவ, சேருவில பிரதேச செயலாளர் ஆகிய பதவிகளையும் இவர் வகித்துள்ளார். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக (காணி) கடமை மற்றும் அதேவேளை இவர் சேருவில பதில் கடமை பிரதேச செயலாளராகவும் கடமையாற்றுவார்.

## திருமலை மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் நியமனம்

(எப்.முபாரக்)



திருகோணமலை மாவட்ட உதவி மாவட்ட செயலாளராக (பதில் கடமை) இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் ஜெயகௌரி சிறீபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக இவர் தம்பலகாமம் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

உதவி மாவட்ட செயலாளராக கடமையாற்றிய என். பிரதீபன் வெளிநாடு சென்றமையால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்
# கிரானில் இடம்பெற்ற புது மனை புகு விழா





(வாழைச்சேனை ருத்ரன்)

'கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்' என்ற தொனிப்பொருளில் புது மனை புகு விழா மட்டக்களப்பு கிரானில் இடம்பெற்றது.

சமூக ஆர்வலரான குருசுமுத்து வி.லவக்குமார் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தமிழர் கலாசாரத்தினை பின்பற்றி மக்கள் தங்கள் வீடுகளுக்கு முன்பாக இன்று காலை சுப வேளையில் மாவிலை தோரணம் கட்டியும். குருத்து கட்டியும் பால் காச்சி பொங்கல் இட்டும் தாங்கள் வாழ நினைக்கும் வீடுகளுக்குள் குடி போகும் முகமாக குடி மனை குடி போதல் நிகழ்வினை நடாத்தினார்கள்.

அத்துடன் புதிய கிணறுகள் மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

மக்கள் தாங்கள் குடியிருக்கும் குறித்த கிராமத்திற்கு பெயர் சூட்டும் முகமாக காணி நண்கொடை செய்தவருக்கு நன்றி செலுத்தும் வகையில் அவரது பெயரிலே ?லவன் எழுச்சி கிராமம்?; என பெயர் நாமமும் சூட்டினார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி இல்லாத நிலையில் வாழும் குடும்பங்களுக்கு புது வருட தினமன்று கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எத்தலை மேட்டுக்காடு எனும் இடத்தில் வைபவ ரீதியாக பயனாளிகளுக்கு காணி உறுதி ஆவணம் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

உறுதி ஆவணங்களை பெற்றுக் கொண்டோர் தங்களுக்கு சொந்தமான காணியில் குடிசை வீடுகளை அமைத்து குடியிருக்கும் நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

கிரானிலுள்ள சமூக ஆர்வலரான குருசுமுத்து வி.லவக்குமார் என்பவரே தமக்கு சொந்தமான சுமார் 15 ஏக்கர் காணியினை 224 பேருக்கு இவ்வாறு இலவசமாக வழங்கி வைத்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் வறுமை நிலையில் வாழும், வாடகை வீட்டில் உள்ளோர். மாற்றுத் திறனாளிகள் மற்றும் கணவனை இழந்தோர் என அடையாளம் காணப்பட்டு அவர்களின் எதிர்கால வாழ்வு கருதி இவ் காணி பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

பயணாளிகளின் பிள்ளைகளின் கல்வி, மேம்பாடு, பொருளாதாரம் விருத்தி கருதி இவ் நடவடிக்கையை முன்னெடுத்ததாக நண்கொடையாளர் வி.லவக்குமார் தெரிவித்தார்.

இதில் பொது தேவைகளான மத ஆலயம், பாடசாலை, போன்றவற்றிக்கும் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அத்துடன் குடியிருப்பாளர்களின் எதிர் கால தேவை, வாழ்வாதாரத்தினை நிவர்த்தி செய்ய சிறுதோட்டப் பயிர் செய்கை நடவடிக்கைக்காக குத்தகை அடிப்படையில் மேலும் 15 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரது செயலை மாவட்டத்தில் பலரும் பாராட்டினார்கள்.

## மூதூர் பிரதேச சபை பொழுதுபோக்கு பூங்காவுக்குள் குப்பை கூளங்கள்
### பொது மக்கள் விசனம்

(எப்.முபாரக்)



மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட பொழுது போக்கு பூங்காவுக்கு குப்பை கூழங்கள் மற்றும் கழிவுப் பொருட்களை கொட்டி மேலால் மண் நிரப்பப்படுவது குறித்து பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இப் பூங்காவுக்கு கூப்பை கூழங்களை இட்டு மண் நிரப்புவதற்கு அனுமதியளித்தது யார் எனவும் சமூக ஆர்வலர்கள் வினவுகின்றார்கள்.

பல தடவைகள் மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளரிடம் கோரிக்கை விடுத்தும் இவ்வாறு குப்பைகளை இட்டு அதன் மேல் மண்ணை பரத்தி சூழலை மாசுபடுத்துகின்ற செயல்களை மேற்கொள்ள அனுமதித்து யார் எனவும் பொது மக்கள் கேட்கின்றனர்.

இவ்வாரான கீழ் தரமான வேலைகளை மேற்கொள்வது மூதூர் பிரதேச சபையின் தவிசாளரா? அல்லது உறுப்பினர்களா? அல்லது செயலாளரா? தொழில்நுட்ப உத்தியோகத்தரா? அல்லது சபையில் வேலை செய்யும் ஊழியர்களா? எனவும் பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

நாம் நினைத்ததைத்தான் செய்வோம் என்று இருக்கின்ற அதிகாரிகளுக்கெதிராக நாம் நடவடிக்கை எடுப்போம் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே கொட்டிய குப்பைகளை மீள அப்புரப்படுத்தி முழுமையாக மண்ணை இட்டு நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் பொது மக்கள் வீதிக்கு இரங்கி எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டி ஏற்படும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ரிஷாத் பதியுதீன் கைதுக்கு நிந்தவூர் பிரதேச சபையில் கண்டன தீர்மானம் நிறைவேற்றம்

(பாறுக் ஷிஹான்)



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நிந்தவூர் பிரதேச சபை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சபை அமர்வுக்கு கருப்புச்சால்வை அணிந்து சமூகமளித்திருந்ததுடன் தொடர்ந்து சபையில் ஏகமனதாக கண்டன தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபையின் ஏப்ரல் மாதத்திற்கான 04 ஆவது சபையின் 3%ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு வியாழக்கிழமை மாலை நிந்தவூர் பிரதேசசபையின் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மத அனுஸ்டானம் இடம்பெற்ற பின்னர் 2021 மார்ச் மாதத்திற்கான கூட்டறிக்கை உறுதிப்படுத்தல், 2021 மார்ச் மாதத்திற்கான கணக்கறிக்கை உறுதிப்படுத்தல், தவிசாளர் எம்.எ.எம். தாஹிர் உரை, என்பன தொடர்ச்சியாக இடம்பெற்றன.

மேலும் குறித்த பிரதேச சபையின் அமர்விற்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் 6 பேர் கருப்புச்சால்வை அணிந்து வருகை தந்திருந்ததுடன் மற்றும் ஏனைய கட்சிகளை சேர்ந்த உறுப்பினரும் இவ்வாறு அணிந்து சபைக்கு வருகை தந்திருந்தனர்.

அத்துடன் தவிசாளர் உட்பட சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்களான ஏ.அஸ்பர், ஏ.அப்துல் வாஹிது ஆகியோர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் கண்டனம் தெரிவித்து உரையாற்றியதுடன் தொடர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர்களான றியாஸ் ஆதம், அன்சார் உள்ளிட்டவர்களும் கைது நடவடிக்கை கண்டித்து உரையாற்றினர்.

இதன் பின்னர் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் விடுதலை செய்யப்பட வேண்டும் என சபையில் ஏகமனதாக கண்டனத்தீர்மானமும் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை சபையின் உப தவிசாளர் வை.எல் சுலைமாலெப்பை முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீனின் கைது நடவடிக்கை தொடர்பில் உரையாற்றியதுடன் அது தொடர்பில் ஏனைய உறுப்பினர்களின் கண்டனத்தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிக்காமல் மௌனமாக இருந்ததை காண முடிந்தது.

சபை நடவடிக்கையின் போது திண்மக் கழிவுகளை தரம் பிரித்து அகற்றுவது தொடர்பாக தவிசாளரினால் உறுப்பினர்களுக்கிடையே வினவப்பட்ட ஆலோசனைக்கமைய உறுப்பினர் கே.எம். ஜெஸீமா ஆக்கபூர்வமான விடயங்களை சுட்டிக்காட்டினார்.

இறுதியாக நிந்தவூரில் இருந்து பல்கலைக்கழகம் நுழையும் மாணவர்களை பாராட்டியும் இப்தார் நிகழ்வும் இடம் பெற்றிருந்தது.

## கல்முனை மாநகர உத்தியோகத்தரைத் தாக்கிய வர்த்தகருக்கு
## நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு

( அஸ்லம் எஸ்.மௌலானா)



கல்முனை மாநகர சபையின் வருமான பரிசோதகரைத் தாக்கி, அரச கடமைக்குக் குந்தகம் விளைவித்த சம்பவம் தொடர்பில் சாய்ந்தமருது வர்த்தகர் ஒருவர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளார்.

கடந்த 20181029 ஆம் திகதி கல்முனை மாநகர சபையின் வருமான பரிசோதகர்கள், சாய்ந்தமருது பிரதேசத்தில் வியாபார அனுமதிப் பத்திரம் தொடர்பிலான களப்பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, வாகன திருத்தம் செய்யும் நிலையமொன்றின் உரிமையாளரினால் வருமான பரிசோதகர் ஒருவர் தாக்கப்பட்டிருந்தார். இதையடுத்து கல்முனை பொலிஸ் நிலையத்தில் அவ்வுத்தியோகத்தரினால் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவ் வர்த்தகர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்த நிலையில், குறித்த நபர் குற்றவாளி என நேற்று வெள்ளிக்கிழமை தீர்ப்பளிக்கப்பட்டது.

## ரிஷாத் பதியுதீனை பாராளுமன்றத்திற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு சி.ஐ.டி.க்கு அறிவுறுத்தல்!

(பைஷல் இஸ்மாயில்)

தடுத்துவைத்து விசாரிக்கப்பட்டுவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன், கோரிக்கைவிடுத்தால் அவரை பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களின் ஆலோசனைக்கு அமைய இது அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மே 04ஆம், 05ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணிக்கு பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கமைய முற்பகல் 9.30 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினரை பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொவிட் - 19 தொற்றுநோய் சூழல் காரணமாக சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்றி பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் அவர்களை பாராளுமன்றத்துக்கு அழைத்துவருமாறும் நரேந்திர பெர்னாந்து அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## உதவி தேர்தல் ஆணையாளர் சொந்த மாவட்டத்திற்கு இடமாற்றம்

(எஸ்.எஸ். அமிர்தகழியான்)

மட்டக்களப்பு உதவி தேர்தல் ஆணையாளராக ஆறு ஆண்டகள் பணியற்றிய இரா.சசீலன் வட மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளராக இடமாற்றம் பெற்று எதிர்வரும் 4ம் திகதி செல்லவுள்ள நிலையில் அவருக்கான பிரிவுபசார நிகழ்வினை மட்டு மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை 4.30மணியளவில் அரசாங்க அதிபர் க.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

இவர் இலங்கை அரச சேவையில் 2009ம் ஆண்டு முகாமைத்துவ உதவியாளராக இணைந்து கொண்டு மாத்தறை யாழ்பாணம் கொழும்பு என பல பகுதிகளிலும் பணியாற்றி வந்தகாலத்தில் இலங்கை நிர்வாக சேவையின் திறந்த போட்டிப் பரீச்சையில் 2012ம் ஆண்டு சித்தியடைந்து தனது பயிற்சியை முடித்து விட்டு தேர்தல் திணைக்களத்தின் உதவி தேர்தல் ஆணையாளராக இணைந்து ஆறு ஆண்டுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு தேர்தல்களை சிறப்பாக மூன்று ஆரசாங்க அதிபர்களுடன் பணியாற்றியுள்ளார்.

தேர்தல் திணைக்களத்தில் எல்லோரிடமும் அன்புடன் பழகி சிறப்பாக சேவையாற்றியிருந்தமை இங்கு எல்லோராலும் நினைவு கூறப்பட்டது.

உதவி தேர்தல் ஆணையாளரை வழ்த்துப்பா பாடி பொன்னாடை போர்தி நினைவு பரிசில்களும் வழங்கப்பட்டது இன் நிகழ்வில் மேலதி அரசாங்க அதிபர்களான சுதர்சினி ஸ்ரீகாந்த் முகுந்தன் நவரூபரஞ்சனி பிரதேச செயலாளர்கள் மாவட்ட செயலகத்தின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டு சசீலனை வாழ்த்தி வழியனுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷாட் பதியுதீனின் கைதினை எதிர்த்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்








**(ஊர்காவலன்)**

மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனை தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைத்து, அரசியல் நாடகத்தை, அரங்கேற்றிக்கொண்டிருக்காமல், அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

மக்கள் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரும் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பாயிஸின் ஏற்பாட்டில் கொழும்பு, தெவட்டகஹ பள்ளிக்கு அருகாமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், கொழும்பின் பலபாகங்களிலும் இருந்து வருகை தந்த மக்கள் பங்கேற்றனர்.

ரிஷாட் பதியுதீனை விடுதலை செய். அநீதியான முறையில் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைத்திருக்காதே. நள்ளிரவில் கைது செய்ததன் பின்னணி என்ன?. யாரை திருப்திப்படுத்த இந்தக் கைது? போன்ற சுலோக அட்டைகளையும், நீளமான பதாதைகளையும் தாங்கியவாறு, சமூக இடைவேளிகளை பேணி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற வேளை பொலிசார் ஆங்காங்கே குவிக்கப்பட்டிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜித்த சேனாரத்ன, முஜிபுர் ரஹ்மான், முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த அர்ஷத் நிசாம்தீன், மக்கள் காங்கிரஸின் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் எஸ்.சுபைர்தீன், வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரிப்கான், உயர்பீட உறுப்பினர்களான பாயிஸ், தாஹிர், அன்சில், நௌபர் மற்றும் முக்கியஸ்தர்களான ரம்சி, நிஜாம் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், சகோதர சமூகத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் ஆகியோர் போராட்டத்தில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

போராட்டத்தில் கலந்துகொண்ட ராஜித்த சேனாரத்ன எம்.பி கருத்து தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை அநியாயமாகக் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். அவரின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளது. அவர் முஸ்லிம்களின் தலைவர்களில் ஒருவர். கட்சித் தலைவராக இருக்கும் அவரை பின்கதவால் வந்து கைது செய்வதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? அவர் என்ன பயங்கரவாதியா? குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்கு அழைத்த போதெல்லாம் அவர் தவறாமல் சென்று விசாரணைக்கு ஒத்துழைத்திருக்கின்றார். இது ஒரு பிழையான நடைமுறை. ஜனநாயகத்தை மீறும் செயல். எனவே, அவரை விடுதலை செய்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் யார்? என்பதை உடனடியாக அறிவியுங்கள் என்றார்.

போராட்டத்தில் கலந்துகொண்ட முஜிபுர் ரஹ்மான் எம்.பி கருத்து தெரிவிக்கையில்,

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக தொடர்ந்தேர்ச்சியாக ரிஷாட் பதியுதீனை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைக்கு அழைத்து, போதியளவு விசாரணை செய்தது. எனினும், அவர் மீது எந்தவிதமான குற்றச்சாட்டுக்களையும் நிரூபிக்க முடியாமல் போனது. ஜனாதிபதி ஆணைக்குழுவிலும் அவர் விசாரிக்கப்பட்டார். ஆனால், இறுதி அறிக்கையிலும் அவர் குற்றவாளியாக குறிப்பிடப்படவில்லை. இது முழுக்க முழுக்க எதிர்க்கட்சிகளை பழிவாங்கும், அவர்களை அச்சப்பட வைக்கும் நடவடிக்கை. இதன்மூலம் இந்த அரசு தொடர்பில், எவரும் கேள்வி எழுப்பக் கூடாது என்ற ஒரு மறைமுகமான அச்சுறுத்தலே விடுக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு எதிராக கருத்து தெரிவித்து வரும் ஹரின் மற்றும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அச்சுறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனை விடுதலை செய்யுங்கள் அல்லது அவர் மீது குற்றச்சாட்டு இருந்தால் நீதிமன்றத்தில் நிறுத்துங்கள். உங்கள் அதிகார பலத்தை பாவித்து பலாத்காரமான முறையில், பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தி அவரை தடுத்து வைத்திருக்க வேண்டாம் என்றார்.

# பிரதமர் மஹிந்தவிடம் பொறுப்பை கையளியுங்கள்

## முருத்தெட்டுவே தேரர் ஜனாதிபதிக்கு ஆலோசனை



**(நூருல் ஹுதா உமர்)**

நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ள அரச இயந்திரத்தையும் நாட்டையும் கட்டியெழுப்பும் பொறுப்பை பிரதமர் மஹிந்தவிடம் கையளிக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அபேராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் ஆலோசனை வழங்கியுள்ளார். அபேராம விகாரையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், பொறுப்பை பிரதமர் மஹிந்தவிடம் கையளித்தால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எவ்வித பாதிப்பும் நடக்கப் போவதுமில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் அரச சேவையும், அரச இயந்திரமும் இன்று வீழ்ச்சியடைந்துள்ளது. இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு ஜனாதிபதியை கேட்கிறேன். இது தொடர்பில் ஆலோசனை கேட்க பொருத்தமான பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுமாறு கேட்கிறேன். அண்ணனும் தம்பியும் இணைந்து செயற்பட முடியும். அரச சேவையும், அரச இயந்திரமும் வீழ்ச்சியடைந்துள்ளது தொடர்பில் ஆராய்ந்து பாருங்கள்.

அமைச்சர்கள் என்னிடம் ஒன்றையும், ஜனாதிபதியிடம் ஒன்றையும் கதைக்கிறார்கள். கொள்கைகளற்ற இவ்வாறானவர்கள் தொடர்பில் நான் பேச விரும்பவில்லை. இந்த நாட்டை விற்பனை செய்தாவது அவர்களின் அமைச்சுக்களை தக்க வைத்து கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம். எனினும் பிரதமர் மஹிந்த அவ்வாறானவர் இல்லை. நாட்டை கட்டியெழுப்பிய இன்னும் கட்டியெழுப்ப நினைப்பவரே அவர். அவரை நன்கு அறிந்தவன் என்றவகையில் கூறுகிறேன் பொறுப்பை பிரதமர் மஹிந்தவிடம் கையளித்தால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எவ்வித பாதிப்பும் இருக்கப் போவதுமில்லை. நிறைவேற்று ஜனாதிபதியான குத்தவும் மஹிந்தவும் இணைந்து ஆலோசித்து செயலாற்ற வேண்டும். என்றார்.

# கோரோனா குறித்த சகல சமூகக் கட்டுப்பாடுகளையும் பொதுவான முறையில் முன்னெடுக்க வேண்டும்

இலங்கை முழுவதிலும் கொரோனா தொற்று மிகப் பாரியளவில் பாதிப்பை உருவாக்கி வருகின்றது. பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருப்பதுடன் பல்லாயிக்கணக்கானோர் பாதிக்கப்பட்டும் வருகின்றனர்.

கொரோனா பெருந்தொற்று தீவிரமாக பரவி வரும் நிலையில் சுகாதார கட்டுப்பாடுகளை மிக தீவிரமாக அமுல்ப்படுத்தி கொரோனாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தக் காலகட்டத்தில் மதச் சடங்குகள் நடைபெற வேண்டியது மிக அவசியமானதொன்றே. ஆயினும் பெருமளவில் மக்கள் கூடுவதை கட்டாயமாக தடுக்க வேண்டும்.

வடக்கைப் பொறுத்தமட்டில் சைவ ஆலயங்களில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்ற போதிலும், தென்னிலங்கையிலிருந்து ஆட்களை வரவழைத்து நயினாதீவு நாகவிகாரையில் தேசிய வெசாக் நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதித்திருப்பது மிகவும் தவறான நடவடிக்கையாகும்.



கொரோனாவானது மேலும் அதிகரித்துக் கொண்டே போகின்றது. அது சகலருக்கும் பரவக்கூடிய ஒன்று. ஆகவே, மதங்களைக் கடந்து சகலருக்கும் பொதுவான பாதுகாப்பு விடயங்களை கையாள வேண்டும்.

கொரோனாவிற்கு எதிரான சுகாதார ரீதியான சகல கட்டுப்பாடுகளையும் பொதுவான முறையில் முன்னெடுக்க வேண்டும்.

குறிப்பிட்ட மதங்களின் விழாக்களைக் கட்டுப்படுத்துவது, மற்றைய மதங்களின் விழாக்களைக் கவனிக்காது விடுவது என்பது அந்தக் கட்டுப்பாடுகளின் நோக்கங்கள்மீது மக்களைச் சந்தேகம் கொள்ள வைக்கின்றது.

ஆகவே கொரோனாவிற்கு எதிரான சகல கட்டுப்பாடுகளையும் உடனடியாக பொதுவான முறையில் முன்னெடுக்க வேண்டும். இந்த சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் அமுல்ப்படுத்துவதே உண்மையான கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையாக அமையும். இதை, சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தில் எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார்.

# மூன்றாவது அலை வீரியமானது அதிக அவதானம் தேவை

சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ. ஆர்.எம். தௌபீக் அறிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது கொரோனா தொற்று தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பொதுப் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களில் பயணிக்கும் பிரயாணிகள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு அவர் வலியுறுத்தியுள்ளார். சமூக இடைவெளியைப் பேணி, முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும் எனவும் மீறும் பட்சத்தில் பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

சுகாதாரநடைமுறைகளைப் பின்பற்றாமல் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்ற பஸ்களைப் பரிசோதிப்பதற்கு பொலிஸாரும் சுகாதார அதிகாரிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இதே வேளை, கிழக்கு மாகாணத்தில் கொவிட்19 இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருவதாகவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். இதன் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் சில சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இன்று தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருவதாகவும், நாளை முதல் கிழக்கு மாகாணத்தின் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் இத்தடுப்பூசி ஏற்றப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முதலாவதாக சுகாதாரத் துறையினருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 50 மில்லி கிராம் கேரோயினுடன் கைதானவருக்கு 9000 ரூபா அபராதம்

**(வாஸ் கூஞ்ஞ)**

சட்டபூர்வமற்ற முறையில் தன் வசம் கரோயின் என்ற போதைப் பொருளை வைத்திருந்த நபர் ஒருவருக்கு மன்னார் நீதவான் நீதிமன்றம் தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மூன்றுமாத சாதாரண சிறைத்தண்டனை அல்லது சமூதாய சீர்திருத்த திட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டும் என கட்டளை பிறப்பித்தது.

புதன்கிழமை அடம்பன் பொலிசார் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் முன்னிலையில் போதைப்பொருள் வைத்திருந்த நபர் ஒருவரை முன்னிலைப்படுத்தினர்.

இவ் நபர் தன்வசம் சட்டபூர்வமற்ற முறையில் 50 மில்லி கிராம் கரோயின் என்ற போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற குற்றம் சாட்டப்பட்டே இவர் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவ் நபர் நீதவான் முன்னிலையில் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து இவ் நபருக்கு 9000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் மூன்று மாதங்களுக்கு சாதாரண சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது. சிறைத்தண்டனை அனுபவிக்க விருப்பம் இல்லையெனில் 100 மணித்தியாலங்கள் சமூதாய சீர்திருத்த நிகழ்ச்சி திட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டும் என மன்று கட்டளை பிறப்பித்திருந்தது.

இவ் குற்றவாளி தனக்கு விதிக்கப்பட்ட தண்டப்பணத்தை செலுத்தியதுடன் 100 மணித்தியால சமூதாய சீர்திருத்த நிகழ்ச்சி திட்டத்தில் இணைந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் பதிவான கோரோனா மரணம்

அனுமதிக்கப்பட்ட வயோதிபர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை கந்தசாமி கோயில் வீதியைச்சேர்ந்த கே.மகேந்திரா (75 வயது) எனவும் தெரிய வருகின்றது.

இதேவேளை தந்தை உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையில் அழுது கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு பெறப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் மூலம் மூவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் மகன் திருகோணமலையில் உள்ள பிரபல சீமெந்து தொழிற்சாலையில் கடமையாற்றி வருகின்றவர் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இருந்தபோதிலும் பிரபல சீமெந்து தொழிற்சாலையில் அதிகளவிலான கொரோனா தொற்றாளர்கள் இனங்காண பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பரிசோதனையின் போது அங்கு கடமையாற்றி வருபவர் களுக்கு தொற்று ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

ஆகவே சீமெந்து தொழிற்சாலையில் கடமையாற்றி வந்தவர்களுக்கு சிறந்த முறையில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதாக என்ற சந்தேகமும் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதாரத் திணைக்களம் கூடிய கவனம் எடுக்க வேண்டும் எனவும் பாலையூற்று மற்றும் பூம்புகார் பகுதிகளில் சீமெந்து தொழிற்சாலையில் கடமையாற்றி வந்தவர்களுக்கே அதிக அளவில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org